**Minutes of Public Hearing held on 24.07.2024 at 11:00 A.M. held in Nainar Mahal, Munnirpallam Post, Mela Karungulam Village, Palayamkottai Taluk, Tirunelveli District with respect to the proposed project of Thiru. M.S.Vijaya Ragul, Rough Stone and Gravel Quarry over an extent of 3.31.50 Ha in S.F. No.200/2, 201/2 and 204/1B2 of Omanallur Village, Cheranmahadevi Taluk, Tirunelveli District**

**Details of participants in this meeting**

| | | |
|---|---|---|
| Shri Arpit Jain., I.A.S., | : | Sub Collector, Cheranmahadevi, Tirunelveli District. |
| Tmt. C. SuyambuThangarani | : | District Environmental Engineer, TNPC Board, Tiruneveli. |
| Public and Government Officials | : | Details are attached (Annexure-1) |

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M.S.Vijaya Ragul, Rough Stone and Gravel Quarry over an extent of 3.31.50 Ha in S.F. No.200/2, 201/2 and 204/1B2 of Omanallur Village, Cheranmahadevi Taluk, Tirunelveli District was conducted at M/s. Nainar Mahal, Munnirpallam Post, Mela Karungulam Village, Palayamkottai Taluk, Tirunelveli District on 24.07.2024 at 11.00 A.M.

District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Sub-Collector, Cheranmahadevi, Government officials, members of the public, and industry representatives who have attended the Public Hearing. She informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification 2006. She also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu. she informed that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

Then the Environmental consultant of the project has made detailed presentation on the project of Thiru. M.S.Vijaya Ragul Rough Stone and Gravel Quarry to the Public along with Environmental Management plan by Power Point Presentation.

After that, Sub-Collector, Cheranmahadevi, said that the public to express their views on the project orally or in writing. Hence also informed that the public views are recorded and will be send to the government.

After that, the public has furnished their views with respect to the project as follows.

**1. Mr. K. Muthu Alibu, Omanallur village:-**

He expressed that, it is not clear the public hearing is conducted for whom, no announcement has been made to the people of our area that such a meeting will be held by the government. He mentioned that it was Known to us about this public hearing meeting only last night. Formally this meeting should be held in our town Omanallur or in Gopalasamudram Town Panchayat area. Our taluk is Cheranmahadevi. Whereas, it is held in Palayamkottai taluk. Therefore, he said that he is protesting on behalf of the public that this meeting is being held here for the purpose of asserting that no public

should attend the meeting and that there is no public opposition. Our town is very affected by this quarry. Around 500 meters from the quarry our town and our street are located. All the houses are shaking because of these quarry operations. But this report says there is no environmental impact.

He also expressed that we had already made a petition to the District Collector during 2022 to close the quarry. As well as April 2023 and October 2023, we have also filed a petition regarding this. But no action has been taken yet. But now you are holding a public hearing meeting to start a quarry in the place in front of it. He said that he did not understand how this happened.

All the people of Omanallur village are standing outside. The people sitting inside having no relation with omanallur people. He asked that this public hearing to be conducted for local people and other village people.

**2. Mr. Murugan, Mela Omanallur village:-**

He said that omanallur village situated near the quarry. Mosque, streets and houses are located within 500 meters of the quarry. The pond has collapsed due to the impact of the quarry blast. It affects everyone. Despite many petitions to stop this quarry, no action has been taken so far. This quarry has a complete impact on the people of our town. The well and the houses are in a state of collapse. So he requested to visit the site to decide whether to give permission.

**3. Mr. Meeran Mukaideen, Mela Omanallur Village:-**

He asked that it is mentioned in the report that western ghats is located in 30 KM and railway station is located 20 KM in north, whereas, Omanallur village located in 300 meter is not included in the report. Also, he asked it is mentioned in the report that Tamirabharani river is located in 12 KM, the same time patchaiyar river in 200 meter is not included in the report. Similarly, a road passes 4 feet away from the quarry where the project is located. Why is it not mentioned in the project report? Also, in the project report, it has been mentioned that there is no catchment area near the quarry site. But 200 acres around the quarry site, the land is cultivated with agriculture and paddy. There is a pond nearby. They are building a retaining wall in the pond through the Public Works Department, but in 4 days that wall collapses. What do we say about this? he asked.

He also said that one overflow bridge odai was collapsed in its own three months ago and requested to visit the collapsed bridge built with great difficulties. There are Temples, Churches and Mosques.

**4. Mrs. Davalath, Mela Omanallur village:-**

She expressed that their lives need protection. All the houses have exploded. Come to the site and see that all the houses are falling and the wires are hanging. She also said that their lives are not safe. So she asked to protect their lives and masons complain that they cannot repair the houses. They say that the house should be demolished and built anew. We live in this town for our home. If we don't have those houses, we don't have our lives, so do good, she said.

**5. Mrs. Seyed Ali Fatima, Mela Omanallur village:-**

She said that it has been 5 years since our house was built. But that's all gone. They set off one blast at 2 o'clock and one at 5.45 p.m. When that explosion explodes, fear comes to us by itself. He added that their house is very close to the quarry and beyond that there are many houses to the east. There is a fear of when the wall will

collapse. All the cement plaster has collapsed and all the walls are damaged. She requested to come to site and see that all the houses got cracked.

**6. Mr. Selvakumar, Mela Omanallur village:-**

He said that instead of saying what is the impact of the quarry on our town, if the officials come and visit, they will know what the impact is. Last year when I and 3 persons were traveling in an auto, a stone from the quarry fell near our auto, we filed a petition in Munneerpallam police station. That investigation is also currently underway. When there is an explosion, all the windows and doors in the house vibrate. Many houses are affected. So he requested us to come up with a good solution.

**7. Mr. Kannan, Mela Omanallur village:-**

He said that a building is located inside the quarry itself. But how can the buildings in the town collapse without any of the buildings in the quarry being affected he asked. Some people said that no one was aware of this public hearing. Also, during blasting in the quarry, the people working in the quarry will stop within about 1 km and detonate only after making warning. Therefore, he said that there is no harm to the public from this quarry.

**8. Mr. Kadhar Ali, Mela Omanallur village:-**

He said that I was born and brought up in Omanallur village. No one aware about this meeting. It arrived last night. Small children are afraid of getting stoned from the quarry and falling in the auto. And not all the people sitting are from Omanallur. All are within 15 km. The quarry is located within the distance of 500m. There is a danger that the nearby pond inside the town will break and water will enter the town.

The bridge vibrates with each explosion. We have got the bridge with great difficulty. He pointed out that the bridge vibrates a lot due to heavy vehicles carrying heavy loads.

**9. Mr. Samuel, Adamithippankulam:-**

He said that we were working in the said quarry and that quarries have been operating in the area since his childhood. He asked why they are protesting only for this quarry without protesting in any of other public hearing meetings held before this. He said that his mother and father used to work in the quarry and he was able to support his family because he also worked in the quarry. The agitators said that the quarry should not take place and asked them to give us another job in his own town; He said that there are about 10 quarries and there is no public opposition to any other quarry. So he requested that this quarry should be established in his area so that our family can function well.

**10. Mr. Prince, Adamithippankulam:-**

He mentioned that the quarry has been operating in their area for more than 100 years. He added that these quarries have not caused any harm to the people of our area. If such quarries are established for the people of our region; There is only life. We are in a good position only because the said quarry is working in our area.

He said that our area definitely needs this quarry and around 200 families depend on it for their livelihood. Otherwise, he requested to provide another job opportunity for 200 families. So he requested that permission be given to set up this quarry in our area.

**11. Mr. Jalaluddin, Mela Omanallur village:-**

He said that in Adamithipankulam pond that the quarry collapsed and 6 died. Adamithipankulam Pond is 5 km from Omanallur Quarry. Therefore, we have no problem with the establishment of the quarry, he requested to find out the reason why our houses are affected and take action. .

**12. Mrs. Madar Banu, Mela Omanallur village:-**

She says that she lives in an area near the quarry and when the quarry explodes, all the things in the house vibrate. The sheets in the house and the house are all scratched. So he requested to take a good decision in this regard.

**13. Mr. Kandavel, Mela Omanallur Village:-**

He said that he was working in the said quarry. He also said that many people are asking money in the quarry. He insisted that it was threatening and that there was no harm caused by the quarry.

**14. Mr. Esakki pandi, Piranjari Village:-**

He added that he has been working in the said quarry for 4 years and our livelihood is from the said quarry. He insisted that there was no problem with the quarry for the last 4 years, hence he wanted for the quarry.

**15. Mr. Aeman Raja, Piranjari Village:-**

He said that he has been working in the said quarry for the last 5 years and if the quarry does not work, he will have to go to Chennai to look for another job.

**16. Mr. Shaji, Mela Omanallur village:-**

He said that he lives in the town where the quarry is located, and when blasting in the quarry, his four-year-old son jumps up on hearing the blast. He requested to come and see once when detonating so that you can feel how much vibration is caused by the detonation. He wondered how people could live in that town. And they are talking here that they want to stay away from the town and get a job. But we are talking about our lives. So does work matter? Does life matter? he asked. All house walls are in scratch condition. He said that if the officials come and investigate, the details will be revealed.

**17. Mr. Jabar Ali, Mela Omanallur village:-**

He said that there are many quarries operating in our town. We have not conducted any protest till date. But this quarry is very close to our town. All other quarries are 2 to 3KM away from the town. But the problem is that the quarry is located very close to the town. So he requested to remove this quarry from here and take it to another place. He added that it has been two years since he built the house, but everything has exploded. He also said that if permission is given for another 5 years, the entire house will be demolished. So we have no objection to setting up a working quarry near our town 2 km away, he said, adding that there is a pond in front of the quarry.

He also asked the officials to come and inspect our area and take a decision after that. He said that employment is a necessity. We don't need any job opportunities after destroying our town, he said.

**18. Mr. Shenbagamuthu, Gopalasamudram village:-**

He expressed that while starting a business, complaints can be raised about the industry. But saying that permission should not be given is illegal, he said. After consulting on a project; A decision is taken regarding the approval of the scheme. And the quarry which is already in operation has not been affected so far. Therefore, an application has been made for permission for the next quarry. And the panchayat gets revenue from the new project. Permission for the project is sent only after obtaining all the approvals from the Village Administrative Officer to the Panchayat. Therefore, it is registered as illegal to request not to give permission to the quarry.

**19. Mr. Muthuselvan, Adamithippankulam village:-**

He said that many families have been living from this quarry till today. During my father's time, this quarry was the source of income. Only some people are preventing this quarry, so he requested to have this quarry.

**20. Mr. Ismail, Mela Omanallur village:-**

He said that everyone says job opportunity, but we have to think about what kind of work it is. One should think whether it is a good thing to do when one segment is suffering in a town and another segment is looking for work. He also said that they have placed a tree 2 feet away from the road. After that the quarry starts, other village people say they want job opportunities. But we locals have come to talk about our problems. Our house is the 2nd house next to the mosque. Hence, he requested to come to the site and see how many scratches there are on the building wall. Further, he expressed that employment is a must, but employment should not affect another. Even though we have filed a complaint on behalf of our town earlier, nothing has happened till date. We are not enemies of anyone. We are just friends. We are willing to help everyone.

When the blasts go off, if the officials come and visit, they will hear how much noise is coming. So he requested the authorities to look into it and take action.

**21. Mr. Kathar Maideen, Mela Omanalluar village.**

He said that everyone says job opportunity, but is it fair to demand a job after destroying the town? Officials should come and visit our town, only then will know merits and demerits. Also, he said you don't understand when we say and the officials can realize the reality if visited the site.

**22. Mr. Maharajan, Karungulam village:-**

He said that he is doing business with Tipper lorries and Truck. He also said that around 200 trucks are operating around this area. Among them 200 truck drivers and 200 conductors are working. The main occupation in the area is beedi making by women, while men work as masons. They mostly work in the construction industry. As it is, 4 quarries are already operating in this area, if this quarry does not get permission, the price of raw materials such as gravel and sand will rise. We are bringing it from towns like Thazhayuthu and Karaseri where raw materials are already scarce. At the same time, when a new quarry is established in this area, the price will decrease a little. People living nearby will get employment opportunities. So he requested to kindly help in setting up a new quarry.

**23. Mr. Sudalaikannu, Subramaniapuram Village:-**

He said that he was working as a driver in the said quarry and requested people not to believe that blasting is affecting them as they say. We park all the trucks belonging to the quarry in the quarry area. But till this day, no stone fell on the truck,

breaking the glass or causing any other damage. But they are saying something wrong about Quarry with some intention. So he asked us to have this quarry in our area.

**24. Mr. Selvan, Adamithipankulam village:-**

He added that I have been working as a driver in the said quarry for more than 20 years and the quarry has not caused any harm. There are 5 quarries around the town. "There is no harm, so we want this quarry,he said.

**25. Mr. Aravind, Mela Omanalluar village:-**

He said that in our area these quarries are a real problem. Only trucks can ply on our local roads. It is very difficult to go on that road by bike. It is very difficult to go on this road with children and women. They say they want a job. He said that there is no job opportunity for our town from this quarry and requested that it would be better if this quarry is shifted to another place.

**26. Mrs.Selvi, Adamithippankulam village:-**

She said that my father and mother have been working in this quarry since my childhood. He said that it is not believable to say that the town could not exist because of this one quarry, and that there is no harm from the said quarry, and our town will benefit only if the quarry is located in this area.

**27. Mr. Jebasingh, Kanditankulam village:-**

He said that I have been working at the quarry since I was a child," he said. He added that we have no other business except quarrying. He requested that this quarry be completed as if no other work would be done.

At the end of the meeting, after receiving the petitions given by the public in written form, Sub-Collector, Cheranmahadevi thanked all the public who remained silent till now and voiced their opinions. The meeting was concluded after informing that all comments of the public have been recorded and the recorded comments will be sent to the government.

| | |
|---|---|
| **District Environmental Engineer,**<br>**Tamilnadu Pollution Control Board,**<br>**Tirunelveli** | 27/7/24<br>**Sub-Collector,**<br>**Cheranmahadevi.** |

**திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், ஓமநல்லூர் கிராமம், புல எண்கள். 200/2, 201/2 மற்றும் 204/1B2, விஸ்தீரணம் 3.31.50 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். M.S. விஜயராகுல் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 24.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் அஞ்சல், மேல கருங்குளம் கிராமம், நைனார் மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

இக்கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் விபரம்

1. திரு. அர்பித் ஜெயின், இ.ஆ.ப - சார் ஆட்சியர், சேரன்மகாதேவி திருநெல்வேலி மாவட்டம்.
2. திருமதி. செ. சுயம்பு தங்கராணி - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி.
3. பொது மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் - பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

******

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், ஓமநல்லூர் கிராமம், புல எண்கள். 200/2, 201/2 மற்றும் 204/1B2, விஸ்தீரணம் 3.31.50 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். M.S. விஜயராகுல் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முன்னீர்பள்ளம் அஞ்சல், மேல கருங்குளம் கிராமம், நைனார் மஹாலில் 24.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்களையும், ஏனைய அரசு அதிகாரிகளையும், பொதுமக்கள், தொழில் நிறுவனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றி பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என தெரிவித்து, எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார். கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து எடுத்துரைத்து, திட்டம் குறித்தான பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை அமைதியான முறையில் ஒருவர் பின் ஒருவராக பெயர், ஊரினை தெரிவித்து, கருத்துக்களை பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார். பின்னர் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்களை பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கி துவக்கி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர் தலைமையுரையாற்றிய சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும், தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, கூட்டம் துவங்குவதாக அறிவித்தார்.

அதன்பின் தி/எ். M.S. விஜயராகுல் ரப்ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் பரப்பளவானது 3.31.50 ஹெக்டேர் பரப்பளவு என்றாலும், அருகில் 500 மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ள பிற இரு குவாரிகளின் பரப்பளவை கூட்டும் பொழுது 5 ஹெக்டேர் பரப்பளவிற்கு அதிகமாக வருவதால், மத்திய சுற்றுச் சூழல் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், இக்கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுவதாகவும், திட்டம் குறித்த சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த சர்வே எண், அமையவுள்ள ஊர், அதன் பரப்பளவு, எவ்வளவு கிராவல் மற்றும் கற்கள் 5 வருடகாலத்தில் வெட்டி எடுக்கப்படும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்த விரிவான விளக்கங்களை பொதுமக்களுக்கு விளக்கி கூறினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார் இத்திட்டம் குறித்தான நன்மை மற்றும் தீமைகளை விரிவாக பொதுமக்கள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

1. திரு. K. முத்து அலிபு, ஓமநல்லூர் கிராமம்

இந்தக் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் யாருக்காக நடைபெறுகிறது என்பது தெரியவில்லை. ஏனெனில் இன்றைக்கு நடைபெறும் கூட்டம் தொடர்பாக எங்கள் பகுதி மக்களுக்கு இதுநாள் வரையில் அரசு தரப்பில் இருந்து இப்படியொரு கூட்டம் நடைபெறும் என்று எவ்வித அறிவிப்பும் செய்யப்படவில்லை. நேற்று இரவுதான் இந்தக் கருத்துக் கேட்பு கூட்டம் நடப்பது குறித்து தெரியப்பட்டுத்தப்பட்டுள்ளது என்பதாக குறிப்பிட்டார். முறைப்படி இந்தக் கூட்டமானது எங்கள் ஊரான ஓமநல்லூரில் நடத்தப்பட வேண்டும் அல்லது கோபாலசமுத்திரம் பேருராட்சிக்குட்பட்ட பகுதியில் நடத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு நடக்காமல் தாலுகா விட்டு தாலுகா கூட்டம் நடைபெறுகிறது. எங்கள் தாலுகாவானது சேரன்மகாதேவி. ஆனால் கூட்டம் சேரன்மகாதேவி தாலுகாவில் நடக்காமல் பாளையங்கோட்டை தாலுகாவில் நடத்தப்படுகிறது. எனவே பொதுமக்கள் யாரும் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு இல்லை என்று தெரிவிக்கும் நோக்கத்தில் இந்தக் கூட்டம் இங்கு நடத்தப்படுகிறது என்பதை பொதுமக்கள் சார்பில் தெரிவிப்பதாக கூறினார்.

மேற்படி குவாரியால் எங்கள் ஊர் மிகவும் பாதிப்படைந்து உள்ளது. எங்கள் ஊர் மற்றும் எங்கள் தெரு அமைந்துள்ள பகுதியில் இருந்து 500 மீட்டர் தொலைவுக்குள் மேற்படி குவாரி அமைந்துள்ளது. இந்தக் குவாரி பணிகளால் வீடுகள் எல்லாம் அதிர்கிறது. ஆனால் சுற்றுச்சூழல் பாதிப்பு எதுவும் இல்லை என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தக் குவாரி தொடர்பாக 2022 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளோம். ஏற்கனவே இயங்கி கொண்டுள்ள குவாரியை மூடச் சொல்லித்தான் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களுக்கு மனு கொடுத்துள்ளோம். அதே போல் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமும் 2023-ஆம் ஆண்டு அக்டோபர் மாதமும் இது குறித்து மனு அளித்துள்ளோம். ஆனால் எவ்வித நடவடிக்கையும் இதுவரை இல்லை. ஆனால் தற்பொழுது அதற்கு முன்னால் உள்ள இடத்தில் ஒரு குவாரி ஆரம்பிக்க இப்பொழுது கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துகிறீர்கள். இது எவ்வாறு என்று புரியவில்லை என்பதாக குறிப்பிட்டார்.

ஓமநல்லூர் மக்கள் அனைவரும் வெளியில் நிற்கிறார்கள். ஆனால் உள்ளே உட்கார்ந்து இருக்கும் நபர்களுக்கும் ஓமநல்லூர் மக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. கருத்துக் கேட்பு யாரிடம் நடத்தப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களிடமா? அல்லது வெளியூர் நபர்களிடமா? என்பதை தெளிவு படுத்த வேண்டும் என வினவினார்.

எனவே புதியதாக அமையவுள்ள குவாரிக்கு எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது. எங்கள் ஊரை பார்வையிட்டு அதன் பாதிப்பை உணர்ந்து அனுமதி வழங்கக் கூடாது என கேட்டுக்கொண்டார்.

2. <u>திரு. முருகன், மேல ஓமநல்லூர் கிராமம்.</u>

மேல ஓமநல்லூர் அருகில் தான் குவாரி அமைந்துள்ளது. குவாரி இருக்கும் தொலைவில் இருந்து 500 மீட்டருக்குள் பள்ளிவாசல், தெருக்கள் மற்றும் வீடுகள் அமைந்துள்ளன. குவாரி வெடியின் தாக்கத்தின் காரணமாக குளத்தின் மறுகால் உடைந்து விழுந்துள்ளது. இது அனைவருக்கும் தெரியும். இந்தக் குவாரியை நிறுத்தக் கோரி பல முறை மனு கொடுத்தும் இது வரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. இந்தக் குவாரியால் எங்கள் ஊர் மக்களுக்கு முழுமையான பாதிப்பு உள்ளது. கிணறு, வீடுகள் இடிந்து விடும் நிலையில் உள்ளது. எனவே சமூகம் நேரிடையாக பார்வையிட்டு மேற்படி குவாரிக்கு அனுமதி அளிப்பதா? வேண்டாமா என முடிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

3. <u>திரு. மீரான் முகைதீன், மேல ஓமநல்லூர் கிராமம்.</u>

மேற்படி திட்டம் குறித்த அறிக்கை வாசிக்கும் பொழுது 30 கி.மீ. தூரத்தில் மேற்கு தொடர்ச்சி மலை உள்ளதாகவும், வடக்கில் 20 கி.மீ. தூரத்தில் இரயில் நிலையம் உள்ளதாக தெரிவித்தார்கள். ஆனால் 300 மீட்டர் தூரத்தில் உள்ள மேல ஓமநல்லூர் கிராமம் ஏன் திட்ட அறிக்கையில் வரவில்லை? அதே போல் 12 கி.மீ. தூரத்தில் உள்ள தாமிரபரணி நதியை திட்ட அறிக்கையில் குறிப்பிட்டு விட்டு 200 மீ தூரத்தில் உள்ள பச்சையாறு ஓடுவது குறித்து திட்ட அறிக்கையில் ஏன் குறிப்பிடவில்லை? அதே போல் திட்டம் அமையவுள்ள குவாரியிலிருந்து 4 அடி தூரத்தில் ஒரு சாலை செல்கிறது. அது குறித்து ஏன் திட்ட அறிக்கையில் குறிப்பிடவில்லை. அதே போல் திட்ட அறிக்கையில் குவாரி அமையும் இடம் அருகில் எவ்வித நீர்ப்பிடிப்பு பகுதியும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் குவாரி இடத்தை சுற்றிலும் 200 ஏக்கர் நிலத்தில் விவசாயம் மற்றும் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. அருகிலேயே குளம் உள்ளது. பொதுப்பணித்துறையின் மூலமாக குளத்தில் தடுப்பு சுவர் கட்டுகிறார்கள். ஆனால் 4 நாட்களில் அந்த சுவர் இடிந்து விழுந்து விடுகிறது. இது குறித்து நாங்கள் என்ன சொல்வது இந்தக் கல்குவாரியை சொல்வதா அல்லது பொதுப்பணித்துறை அலுவலகத்தை சொல்வதா? என வினவினார்.

மூன்று மாதத்திற்கு முன்பு மறுகால் ஓடை ஒன்று தானாவே உடைந்து விட்டது. அதே போல் மிகுந்த சிரமத்திற்கு இடையில் அமைக்கப்பட்ட பாலம் எவ்வளவு தூரத்திற்கு கீறல் விழுந்துள்ளது என்பதை நேரில் வந்து பாருங்கள். எங்கள் ஊரில் பள்ளிவாசல் உள்ளது, சர்ச் உள்ளது. கோவில்கள் உள்ளது, அதில் ஏதாவது பலகீனம் என்றால் யார் பதில் சொல்வது என்று வினவினார்.

4. <u>திருமதி. தவுலத், மேல ஓமநல்லூர் கிராமம்</u>

எங்கள் உயிருக்கு பாதுகாப்பு வேண்டும். வீடுகள் எல்லாம் வெடிப்பு ஏற்பட்டு உள்ளது. நேரில் வந்து பாருங்கள் அனைத்து வீடுகளிலும் கீறல் விழுந்து கம்பி தெரியும் அளவில் தான் உள்ளது. எங்கள் உயிருக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. எனவே தங்கள் உயிருக்கு பாதுகாப்பு தரும்படி கேட்டுக்கொண்டார். மேலும் வீடுகளை பழுது பார்க்க இயலாது என கொத்தனார்கள் தெரிவிக்கின்றனர். வீட்டினை புதியதாக இடித்து தான் கட்ட வேண்டும் என கூறுகிறார்கள். நாங்கள் எங்கள் வீட்டிற்காக தான் இந்த ஊரில் குடியிருந்து வருகிறோம். வீடு இல்லை என்றால் அவ்வளவுதான். அந்த வீடுகள் இல்லை என்றால் எங்கள் உயிரும் இல்லை என தெரிவித்தார் எனவே நல்லது செய்யுங்கள் என தெரிவித்தார்.

5. <u>திருமதி. செய்யது அலி பாத்திமா, மேல ஓமநல்லூர் கிராமம்</u>

எங்கள் வீடு கட்டி 5 வருடங்கள் தான் ஆகிறது. ஆனால் அவ்வளவும் கீரல் விழுந்து உள்ளது. சரியாக 2 மணிக்கு ஒரு வெடி மற்றும் 5.45 மணிக்கு ஒரு வெடி வைக்கிறார்கள். அந்த வெடி வெடிக்கும் பொழுது எங்களுக்கு பயம் தன்னால் வந்து விடுகிறது. தங்கள் வீடு குவாரிக்கு மிக அருகில் உள்ளதாகவும், அதைத் தாண்டி கிழக்கில் நிறைய வீடுகள் உள்ளதாகவும் தெரிவித்தார். சுவர் எல்லாம் எப்பொழுது இடிந்து விழுந்து விடுமோ என்ற பயம் உள்ளது. சிமிண்ட் பூச்சு எல்லாம் பெயர்ந்து விழுந்து அனைத்து சுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளது. நேரில் வந்து பாருங்கள் அனைத்து வீடுகளிம் கீறல் விழுந்து கம்பி தெரியும் அளவில் தான் உள்ளது என தெரிவித்தார்.

6. <u>திரு. செல்வக்குமார், மேல ஓமநல்லூர் கிராமம்</u>

குவாரியால் எங்கள் ஊரில் என்னென்ன பாதிப்பு என்று நாங்கள் சொல்வதை விட அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டால் பாதிப்பு என்னென்ன என்பது தெரியும் என்றார். கடந்த வருடம் நான் மற்றும் 3 நபர்கள் ஒரு ஆட்டோவில் செல்லும் சமயத்தில் குவாரியில் இருந்து ஒரு கல் எங்கள் ஆட்டோ அருகே விழுந்தது என்று நாங்கள் முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் ஒரு மனு அளித்துள்ளோம். அந்த விசாரணை கூட தற்பொழுது நடைபெற்று வருகிறது. வெடி வெடிக்கும் பொழுது வீட்டில் உள்ள ஜன்னல் கதவு எல்லாம் அதிர்வு ஏற்படுகிறது. அநேக வீடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. எனவே எங்களுக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

7. <u>திரு. கண்ணன், மேல ஓமநல்லூர் கிராமம்</u>

குவாரிக்குள்ளேயே ஒரு கட்டிடம் அமைந்துள்ளது. ஆனால் அந்தக் கட்டிடம் ஏதும் குவாரியால் பாதிக்கப்படாமல் ஊரில் உள்ள கட்டிடங்கள் மட்டும் எப்படி இடியும்? என வினவினார். ஓமநல்லூரில் யாருக்கும் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக தெரிவிக்கவில்லை என சிலர் கூறினார்கள். மேலும் குவாரியில் வெடி வைக்கும் சமயத்தில் குவாரியில் வேலை செய்யும் நபர்கள் சுமார் 1 கி.மீ தொலைவிற்குள் நின்று எச்சரிக்கை செய்த பின்பே வெடி வைப்பார்கள். எனவே இந்தக் குவாரியால் பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என தெரிவித்தார்.

8. <u>திரு. காதர் அலி, மேல ஓமநல்லூர் கிராமம்</u>

நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் ஓமநல்லூர் கிராமத்தில் தான். மேற்படி கருத்துக் கேட்பு கூட்டம் தொடர்பாக யாரும் தெரிவிக்கவில்லை. நேற்று இரவுதான் தெரியவந்தது. சிறு குழந்தைகள் ஆட்டோவில் செல்வதற்கு குவாரியிலிருந்து கல் வந்து விழுமோ பயப்படுகிறார்கள். மேலும் உட்கார்ந்து இருக்கும் மக்கள் அனைவரும் ஓமநல்லூரைச் சார்ந்தவர்கள் அல்ல. அனைவரும் 15 கி.மீ தொலைவிற்கு அப்பால் உள்ளவர்கள். எங்கள் ஊரிளிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் இந்த குவாரி அமைந்துள்ளது. ஊருக்குள் அருகில் உள்ள குளம் உடைந்து தண்ணீர் ஊருக்குள் வரும் அபாயம் உள்ளது. அதற்குக் காரணம் இந்தக் குவாரிதான்.

ஒவ்வொரு முறை வெடி வெடிக்கும் பொழுதும் பாலம் அதிர்கிறது. மிகவும் சிரமப்பட்டுதான் பாலத்தை வாங்கியுள்ளோம். அதிகப் பாரம் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால் பாலம் மிகவும் அதிர்வு ஏற்படுகிறது என தெரிவித்தார்.

9. திரு. சாமுவேல், அடைமிதிப்பான்குளம்

நாங்கள் மேற்படி கல்குவாரியில் தான் வேலை பார்த்து வருவதாகவும், தன்னுடைய சிறு வயதிலிருந்தே இப்பகுதியில் கல்குவாரிகள் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இதற்கு முன்னால் நடந்த எந்த கருத்துக் கேட்புக் கூட்டத்திலும் எதிர்ப்பு தெரிவிக்காமல் இந்தக் குவாரிக்கு மட்டும் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என வினவினார். தன்னுடைய தாய் தந்தை ஆகியோர்கள் குவாரியில் தான் வேலை பார்த்து வந்ததாகவும் தாமும் குவாரியில் வேலை பார்ப்பதால் தான் தம்முடைய குடும்பத்தை நடத்த முடிகிறது எனவும் தெரிவித்தார். குவாரி நடக்க கூடாது என்று தெரிவிப்பவர்கள் எங்களுக்கு வேறு வேலையை கொடுக்கச் சொல்லுங்கள் என கூறினார். தமது ஊரில் சுமார் 10 குவாரிகள் உள்ளதாகவும், வேறு எந்த குவாரிக்கும் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என தெரிவித்தார். எனவே எங்கள் குடும்பம் சிறப்பாக செயல்பட தங்கள் பகுதியில் இந்தக் குவாரி அமைய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

10. திரு. பிரின்ஸ், அடைமிதிப்பான்குளம்

தங்கள் பகுதியில் கடந்த 100 வருட காலத்திற்கும் மேலாக குவாரி இயங்கி வருவதாக குறிப்பிட்டார். மேலும் இந்தக் குவாரிகளால் எங்கள் பகுதி மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்தார். எங்கள் பகுதி மக்களுக்கு இது போன்ற குவாரிகள் அமைந்தால் தான் வாழ்க்கையே உள்ளது. நாங்கள் நல்ல நிலைமையில் உள்ளதிற்கு காரணமே மேற்படி குவாரி எங்கள் பகுதியில் செயல்படுவதால் மட்டுமே.

எங்கள் பகுதிக்கு இந்த குவாரி கண்டிப்பாக வேண்டும் எனவும், இதை நம்பி சுமார் 200 குடும்பம் வாழ்க்கை நடத்துகிறார்கள் எனவும் தெரிவித்தார். அவ்வாறு இல்லையெனில் 200 குடும்பத்திற்கு வேறு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் எனவும் கேட்டுக்கொண்டார். எனவே எங்கள் பகுதியில் இந்தக் குவாரி கண்டிப்பாக அமைவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

11. திரு. ஜலாலுதீன், மேல ஓமநல்லூர் கிராமம்

அடைமிதிப்பான் குளத்தில் தான் குவாரி இடிந்து விழுந்து 6 பேர் இறந்திருக்கிறார்கள் மீண்டும் அடைமிதிப்பான்குளம் மக்கள் ஓமநல்லூரில் வேலை பார்க்கிறார்களா என்றால் இல்லை என்பதாக தெரிவித்தார். அடைமிதிப்பான் குளம் ஓமநல்லூர் குவாரியிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது. இதனால் குவாரி அமைவதில் எங்களுக்கு பிரச்சனை இல்லை, எங்கள் வீடுகள் பாதிக்கபடுவதற்கு காரணம் என்ன என்பதை பார்வையிட்டு ஆவன செய்யும் படி தெரிவித்தார்.

12. திருமதி. மதார் பானு, மேல ஓமநல்லூர் கிராமம்

தாம் குவாரிக்கு அருகில் உள்ள பகுதியில் குடியிருந்து வருவதாகவும், குவாரியில் வெடி வைக்கும் பொழுது வீட்டில் உள்ள அனைத்துப் பொருட்களும் அதிர்கின்றன. வீட்டில் போடப்பட்டுள்ள ஷீட்டுகள் மற்றும் வீடு அனைத்தும் கீறல் விழுந்து உள்ளது. எனவே இது குறித்து ஒரு நல்ல முடிவினை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

13. திரு.கந்தவேல், மேல ஓமநல்லூர் கிராமம்

தாம் மேற்படி குவாரியில் வேலை பார்த்து வருவதாகவும், குவாரியில் பணம் கேட்டு நிறைய பேர் மிரட்டுவதாகவும், குவாரியினால் எந்தப் பாதிப்பும் இல்லை எனவும் தெரிவித்தார்.

14. திரு. இசக்கிப் பாண்டி, பிராஞ்சேரி கிராமம்

தாம் மேற்படி குவாரியில் 4 ஆண்டு காலமாக வேலை செய்து வருவதாகவும், எங்களுக்கு மேற்படி குவாரியால்தான் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை உள்ளதாகவும் தெரிவித்தார். கடந்த 4 ஆண்டு காலமாக குவாரியால் எந்தப் பிரச்சினை இல்லை எனவும் தெரிவித்து, குவாரி வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

15. திரு. ஏமன் ராஜா, பிராஞ்சேரி கிராமம்

தாம் மேற்கண்ட குவாரியில் கடந்த 5 வருடமாக வேலை செய்து வருவதாகவும், குவாரி இயங்கவில்லை என்றால் வேறு வேலை தேடி சென்னைக்குத் தான் செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

16. திரு. ஷாஜி, மேல ஓமநல்லூர் கிராமம்

தாம் குவாரி இருக்கும் ஊரில் குடியிருந்து வருவதாகவும், குவாரியில் வெடி வைக்கும் பொழுது தன்னுடைய நான்கு வயது மகன் வெடி சத்தம் கேட்டு துள்ளி எழுந்து விடுவதாகவும் தெரிவித்தார். வெடி வைக்கும் பொழுது ஒரு முறை வந்து பாருங்கள் வெடியால் எவ்வளவு அதிர்வு ஏற்படுகிறது என உணர முடியும் என்று தெரிவித்தார். எப்படி அந்த ஊரில் மக்கள் வாழ இயலும் என தெரிவித்தார். மேலும் ஊரை விட்டு தள்ளி இருந்து கொண்டு வேலை வேண்டும் என்று இங்கு பேசுகிறார்கள். ஆனால் நாங்கள் எங்கள் உயிரை பற்றி பேசுகிறோம் என்றார். எனவே வேலை முக்கியமா? உயிர் முக்கியமா? என கேட்டார். அனைத்து வீட்டுச் சுவர்களும் கீறல் நிலையில் தான் உள்ளது. அதிகாரிகள் வந்து ஆய்வு செய்தால் விபரம் தெரியும் என எதிர்ப்பு தெரிவித்தார்.

17. திரு. ஜாபர் அலி, மேல ஓமநல்லூர் கிராமம்

எங்கள் ஊரில் நிறைய கல்குவாரிகள் இயங்கி கொண்டு தான் உள்ளது. நாங்கள் இதுநாள் வரையில் போராட்டம் எதுவும் நடத்தவில்லை. ஆனால் இந்தக் குவாரி எங்கள் ஊரின் மிக அருகில் உள்ளது. மற்ற குவாரிகள் எல்லாம் ஊரை விட்டுத்தாண்டி 2 கி.மீ. 3 கி.மீ -க்கு அப்பால் தான் உள்ளது. ஆனால் இந்தக் குவாரி ஊருக்கு மிக அருகில் அமைந்துள்ளதால் தான் பிரச்சினை. எனவே இந்தக் குவாரியையும் இங்கிருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு கொண்டு செல்லுங்கள் என கேட்டுக்கொண்டார். தாம் வீடு கட்டி இரண்டு வருடங்கள் தான் ஆகிறது எனவும், ஆனால் அனைத்தும் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இன்னும் 5 ஆண்டு காலம் அனுமதி கொடுத்தால் வீடு முழுவதும் இடிந்து விடும் எனவும் கூறினார். எனவே எங்கள் ஊருக்கு அருகில் செயல்படும் குவாரியை 2 கி.மீ தாண்டி அமைப்பதற்கு எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை தெரிவித்து குவாரிக்கு முன்னால் குளம் இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் அதிகாரிகள் எங்கள் பகுதியில் வந்து ஆய்வு செய்து விட்டு அதற்கு பிறகு முடிவு எடுங்கள் என கேட்டுக்கொண்டார். வேலை வாய்ப்பு என்பது தேவைதான் ஆனால் அதற்காக ஒரு ஊரையே அழித்து விட்டு வேலை வாய்ப்பு தருவது என்பது தேவையா என கூற வேண்டும் என தெரிவித்தார். எனவே எங்கள் ஊரை அழித்து விட்டு வேலை வாய்ப்பு எதுவும் எங்களுக்கு தேவை இல்லை என தெரிவித்தார்.

18. திரு. செண்பகமுத்து, கோபாலசமுத்திரம் கிராமம்

ஒரு தொழில் துவங்கும் பொழுது அத்தொழிற்சாலை குறித்து குறைகளை தெரிவிக்கலாம். ஆனால் அனுமதி வழங்கக் கூடாது என கூறுவது சட்ட விரோதமானது என தெரிவித்தார். ஒரு திட்டம் குறித்து தீர ஆலோசனை செய்த பின்னர் தான் அத்திட்டத்திற்கான அனுமதி குறித்து முடிவெடுக்கப்படுகிறது. மேலும் ஏற்கனவே செயல்பட்டு வந்த குவாரியால் இது வரையில் எந்தவித பாதிப்பும் இல்லை. எனவே தான் அடுத்த குவாரிக்கு அனுமதி கேட்டு விண்ணப்பம்

செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய திட்டத்தால் ஊராட்சிக்கு வருவாய் கிட்டுகிறது. கிராம நிர்வாக அதிகாரி முதல் ஊராட்சி அனைத்து அனுமதி பெற்ற பின்புதான் திட்டத்திற்கான அனுமதிக்கு அனுப்பப்படுகிறது. எனவே மேற்படி அரசுக்கு வருமானம் ஈட்டக் கூடிய திட்டத்தை தடை செய்யக் கோருவது சட்ட விரோதமானது என பதிவு செய்வதாக தெரிவித்தார்.

19. திரு. முத்துச்செல்வன், அடைமிதிப்பான்குளம் கிராமம்.

இந்தக் குவாரியால் இன்று வரை பல குடும்பங்கள் வாழ்ந்து கொண்டுள்ளனர். எனது தந்தை காலத்தில் இந்தக் குவாரியை வைத்து தான் வருமானம். இந்தக் குவாரி வேண்டாம் என சில நபர்கள் மட்டும் தடுத்து வருகிறார்கள், எனவே இந்த குவாரி வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

20. திரு. இஸ்மாயில், மேல ஓமநல்லூர் கிராமம்.

அனைவரும் வேலை வாய்ப்பு வேலை வாய்ப்பு என சொல்கிறார்கள். ஆனால் அது எப்படியான வேலை என்பது குறித்து யோசிக்க வேண்டும். ஒரு ஊரில் ஒரு சாரார் கஷ்டப்படும் பொழுது இன்னொரு சாரார் வேலை பார்ப்பது நல்ல விஷயமா என யோசிக்க வேண்டும். ரோட்டில் இருந்து 2 அடி தள்ளி மரம் வைத்துள்ளார்கள். அதற்கு அடுத்தே குவாரி ஆரம்பித்து விடுகிறது. வெளியூர்காரர்கள் வேலை வாய்ப்பு வேண்டும் என கூறுகிறார்கள். ஆனால் நாங்கள் உள்ளூர் மக்கள் எங்கள் பிரச்சினைகளை பேச வந்துள்ளோம். எங்கள் வீடு பள்ளிவாசலுக்கு அடுத்த 2 வது வீடு. அங்கு வந்து பாருங்கள் சுவரில் எவ்வளவு பெரிய கீறல் இருக்கிறது என்று. நேரில் வந்து பாருங்கள். வேலை வாய்ப்பு என்பது கண்டிப்பாக வேண்டும். ஆனால் வேலை வாய்ப்பு என்பது மற்றொருவரை பாதிக்காமல் இருக்க வேண்டும். இதற்கு முன்பு எங்கள் ஊர் சார்பில் பல முறை புகார் அளித்தும் இது நாள் வரையில் எதுவும் நடக்கவில்லை. நாங்கள் யாருக்கும் எதிரிகள் கிடையாது. நண்பர்களாகத் தான் இருக்கிறோம். அனைவருக்கும் உதவும் உள்ளத்தில் உள்ளோம். நாங்கள் யாருக்கும் எதிர்ப்பும் காட்டவில்லை. ஆதரவும் காட்டவில்லை. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும்.

வெடி வெடிக்கும் பொழுது அதிகாரிகள் வந்து பார்வையிட்டால் எவ்வளவு சப்தம் வருகிறது என தெரிய வரும். எனவே அதிகாரிகள் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

21. திரு. காதர் மைதீன், மேல ஓமநல்லூர் கிராமம்.

அனைவரும் வேலை வாய்ப்பு வேலை வாய்ப்பு என சொல்கிறார்கள். ஆனால் ஊரை அழித்து விட்டுத்தான் வேலை வேண்டும் என கோருவது நியாயமா? எங்கள் ஊரில் அதிகாரிகள் வந்து பார்வையிட வேண்டும். அப்பொழுது தான் எங்களின் நிறை குறை தெரிய வரும். நாங்கள் சொல்லும் பொழுது உங்களுக்கு புரியாது. நேரில் வந்து பார்வையிட்டால் தான் நாங்கள் கூறுவது தெரிய வரும் என தெரிவித்தார்.

22. திரு. மகாராஜன், கருங்குளம் கிராமம்

தாம் சொந்தமாக டிப்பர் லாரி வைத்து தொழில் செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் இந்த சுற்று வட்டாரத்தை சுற்றிலும் சுமார் 200 லாரிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 200 லாரி ஓட்டுநர்கள் மற்றும் 200 நடத்துனர்கள் வேலை செய்து வருகிறார்கள். இப்பகுதியில் முக்கியமான வேலை பெண்கள் பீடி சுற்றுவதும், ஆண்கள் கொத்தனார் மற்றும் கையாளாக வேலை செய்து வருகிறார்கள். பெரும்பாலும் கட்டிட தொழிலைச் சார்ந்தே வேலை செய்து வருகிறார்கள். அவ்வாறு இருக்கும் பொழுது ஏற்கனவே இப்பகுதியில் 4 குவாரிகள் இயங்கி வருகின்றன. இருப்பினும் இந்தக் குவாரிக்கு அனுமதி கிடைக்கவில்லையெனில் மூலப் பொருட்களான ஜல்லி மற்றும் மணல் விலை ஏற்றம் ஏற்படும். ஏற்கனவே மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமான தாழையூத்து, காரசேரி போன்ற ஊர்களில் இருந்து கொண்டு வருகிறோம். அதே நேரத்தில் புதியதாக ஒரு குவாரி இந்தப் பகுதியில் அமையும் பொழுது விலை கொஞ்சம்

குறையும். அருகில் வசிக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். எனவே தயவு கூர்ந்து புதிய குவாரி அமைவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

23. திரு. சுடலைக்கண்ணு, சுப்பிரமணியபுரம் கிராமம்.

தாம் மேற்படி குவாரியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், மக்கள் சொல்வது போல் வெடி வைப்பதால் பாதிக்கப்படுகிறது என்பதை நம்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். நாங்கள் குவாரிக்குச் சொந்தமான அனைத்து லாரிகளையும் குவாரிப் பகுதியில் நிறுத்தி வைக்கிறோம். ஆனால் இது நாள் வரையில் எந்த வித கல்லும் லாரியில் விழுந்து கண்ணாடி உடைந்ததாகவோ அல்லது வேறு சேதங்களோ ஏற்படவில்லை. ஆனால் குவாரி குறித்து ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே தவறுதலாக கூறுகிறாரகள். எனவே எங்கள் பகுதிக்கு இந்தக் குவாரி வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

24. திரு. செல்வன், அடைமிதிப்பான்குளம் கிராமம்.

நான் கடந்த 20 ஆண்டு காலத்திற்கும் மேலாக மேற்படி குவாரியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், குவாரியால் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் தெரிவித்தார். ஊரை சுற்றி 5 குவாரிகள் உள்ளன. எந்தவித பாதிப்பும் இல்லை எனவே எங்களுக்கு இந்த குவாரி வேண்டும் என தெரிவித்தார்.

25. திரு. அரவிந்த், மேல ஓமநல்லூர் கிராமம்.

எங்கள் பகுதியில் இந்தக் குவாரிகளால் பெரிய பிரச்சினையாக உள்ளது. எங்கள் பகுதி ரோடுகளில் லாரிகள் மட்டும் தான் இயங்க முடிகிறது. பைக்கில் அந்த ரோட்டில் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்களை வைத்துக்கொண்டு இந்த சாலையில் செல்வது மிகவும் கடினமாக உள்ளது. வேலை வாய்ப்பு வேண்டும் என்று கூறுகிறார்கள். எங்கள் ஊருக்கு வேலை வாய்ப்பு எதுவும் இந்தக் குவாரியால் வேண்டாம் என கூறி இந்தக் கல்குவாரியை வேறு இடத்திற்கு மாற்றினால் நன்றாக இருக்கும் எனக் கேட்டுக்கொண்டார்.

26. திருமதி. செல்வி, அடைமிதிப்பான்குளம் கிராமம்.

எனது சிறு வயதிலிந்தே எனது அப்பா அம்மா ஆகியோர்கள் இந்தக் குவாரியில் தான் வேலை பார்த்து வருகிறார்கள். இந்த ஒரு குவாரியால் ஊரே இருக்க முடியவில்லை என்பது சொல்வது நம்பும் படியாக இல்லை என்றும், மேற்படி குவாரியால் எந்தப் பாதிப்பும் இல்லை எனவும், இந்த பகுதியில் குவாரி அமைந்தால்தான் எங்கள் ஊர் பயன் அடையும் என தெரிவித்தார்.

27. திரு. ஜெபசிங், கண்டித்தான்குளம் கிராமம்.

நான் சிறு வயதிலிருந்தே கல்குவாரி வேலை பார்த்து வருவதாக தெரிவித்தார். எங்களுக்கு குவாரி தொழிலை விட்டால் வேறு தொழில் கிடையாது என்றும் தெரிவித்தார். வேறு வேலையும் தெரியாது என தெரிவித்து இந்தக் குவாரியை நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டார்.

கூட்ட முடிவில், எழுத்துவடிவில் பொதுமக்கள் கொடுத்த மனுக்களை சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்கள் பெற்றுக்கொண்ட பின், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் இதுவரையில் அமைதி காத்து தங்கள் கருத்துக்களை கூறிய பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பதிவுசெய்யப்பட்ட கருத்துக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலை தெரிவித்துக் கொண்டவுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

மாவட்டசுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடுமாசுகட்டுப்பாடுவாரியம்,
திருநெல்வேலி.

27/7/24
சார் ஆட்சியர்,
சேரன்மகாதேவி.